# 2009–2010 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்புகள்

**ஒப்புதல் அளிக்கப்பட்டுள் கீழ்க்காணும் குடிநீர்த் திட்டங்கள் 2009–2010 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.**

**அறிவிப்பு 9**

கோயம்புத்தூர் மாவட்டம், மடத்துக்குளம், சங்கரமநல்லூர், கனியூர், குமரலிங்கம் பேரூராட்சிகள் மற்றும் மடத்துக்குளம், குடிமங்களம், உடுமலைப்பேட்டை ஒன்றியங்களைச் சேர்ந்த 112 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.28.76 கோடி மதிப்பீட்டில் 1,57,717 மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் நிதியாதாரத்துடன், செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**அறிவிப்பு 10**

கடலூர் மாவட்டம், குமராட்சி மற்றும் பரங்கிப்பேட்டை ஒன்றியங்களைச் சோர்ந்த குடிநீர்த் தரம் பாதிக்கப்பட்ட 174 குடியிருப்புகள் மற்றும் கிள்ளை பேரூராட்சிக்கு ரூ.19.94 கோடி மதிப்பீட்டில் 90,342 மக்கள் பயன்பெறும் வகையில் ஊரக குடியிருப்புகளுக்கு குறைந்தபட்ச தேவைத் திட்ட நிதி (25 விழுக்காடு) மற்றும் மத்திய அரசின் தேசிய ஊரக குடிநீர்த் திட்ட நிதி (75 விழுக்காடு) மற்றும் கிள்ளை பேரூராட்சிக்கு குறைந்தபட்ச தேவைத் திட்ட நிதியுதவியுடனும் கூட்டுக் குடிநீர்த் திட்ட செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**அறிவிப்பு 11**

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பேரூராட்சி தனி குடிநீர்த் திட்டம் ரூ.11.92 கோடி மதிப்பீட்டில் 31,800 மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் நிதியாதாரத்துடன், செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**அறிவிப்பு 12**

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த கோசூர், திருக்கம்புலியூர் மற்றும் 11 ஊராட்சிகளில் 116 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.10.78 கோடி மதிப்பீட்டில் 53,879 மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் நிதியாதாரத்துடன், செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**அறிவிப்பு 13**

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம், புதுப்பாளையம் பேரூராட்சிகள் மற்றும் செங்கம், புதுப்பாளைம் ஒன்றியங்களைச் சேர்ந்த 40 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.8.88 கோடி மதிப்பீட்டில் 56,714 மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்தபட்ச தேவை திட்டத்தின் நிதியாதாரத்துடன், செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**அறிவிப்பு 14**

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த என்.பஞ்சம்பட்டி, ஜீவலசருகு, சித்தராவு, அய்யன்கோட்டை மற்றும் 47 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.7.34 கோடி மதிப்பீட்டில் 52,420 பயன்பெறும் வகையில் குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் நிதியாதாரத்துடன், செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**அறிவிப்பு 15**

தகவல் அறிதல் மற்றும் கண்காணித்து கட்டுப்படுத்தும் தொழில்நுட்பம் (SCADA) 2009–10 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் மற்றும் அவினாசி ஒன்றியங்களைச் சார்ந்த 249 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஈரோடு மாவட்டம் முத்தூர்–காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியத்திலுள்ள 240 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் மாநில அரசின் பகுதி–II திட்டத்தின் நிதியாதாரத்துடன் நிறுவப்படும்.

**விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் குடிநீர்த் திட்டங்களுக்கு 2009–2010 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்படும்.**

**அறிவிப்பு 16**

விருதுநகர் மாவட்டம், 7 பேரூராட்சிகள் மற்றும் 11 ஒன்றியங்களைச் சேர்ந்த 1457 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.527 கோடி மதிப்பீட்டில் 10,97,000 மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் நிதியாதாரத்துடன் 2009–10 ஆம் நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**அறிவிப்பு 17**

புதுக்கோட்டை மாவட்டம், 7 ஒன்றியங்களைச் சேர்ந்த 2088 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.225 கோடி மதிப்பீட்டில் 5,90,000 மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் நிதியாதாரத்துடன் 2009–10 ஆம் நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**அறிவிப்பு 18**

கோயம்புத்தூர் மாவட்டம், வீரகேரளம், பேரூர், புலுவாப்பட்டி, வேடப்பட்டி, வடவள்ளி, தொண்டாமுத்தூர், தென்கரை மற்றும் தாளியூர் பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.95.44 கோடி மதிப்பீட்டில் 2,00,000 மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் நிதியாதாரத்துடன் 2009–10 ஆம் நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**அறிவிப்பு 19**

தேனி மாவட்டம், கம்பம் நகராட்சிக்கு ரூ.15.44 கோடி மதிப்பீட்டில் 65,000 மக்கள் பயன்பெறும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் நிதியாதாரத்துடன் 2009–10 ஆம் நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**அறிவிப்பு 20**

சேலம் மாவட்டம், எடப்பாடி, மகுடஞ்சாவடி மற்றும் கொங்கணாபுரம் ஒன்றியங்களைச் சேர்ந்த 237 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.12.90 கோடி மதிப்பீட்டில் 71,469 மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் நிதியாதாரத்துடன் 2009–10 ஆம் நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**கீழ்க்காணும் புதிய குடிநீர்த் திட்டங்கள் 2009–2010 ஆம் ஆண்டில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்**

**அறிவிப்பு 21**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு, திருவோணம், பட்டுக்கோட்டை மதுக்கூர், சேதுபாவாசத்திரம் மற்றும் பேராவூரணி ஒன்றியங்களைச் சேர்ந்த 1200 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.125 கோடி மதிப்பீட்டில் 4,20,000 மக்கள் பயன்பெறும் வகையில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**அறிவிப்பு 22**

திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களுக்கான வைகை அணை மற்றும் பேரணை மதகிற்கிடையில் அமையப் பெற்றுள்ள 8 குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ.74.00 கோடி மதிப்பீட்டில் 6,12,000 மக்கள் பயன்பெறும் வகையில் குழாய் மூலம் குடிநீர் கொண்டு செல்லும் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**அறிவிப்பு 23**

வேலூர் மாவட்டத்திலுள்ள வேலூர் மாநகராட்சி, 6 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 64 வழியோர குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் விரிவான மதிப்பீடு ரூ.1400.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. இத்திட்டத்திற்கான நிதியாதாரம் பெற முனைப்புடன் ஆராய்ந்து வரும் தமிழக அரசு விரைவில் இந்நிதியுதவியைப் பெற்று, திட்ட செயலாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**அறிவிப்பு 24**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகளை மேம்படுத்திட 100 உதவிப் பொறியாளர்கள், 100 இளநிலை உதவியாளர்கள், 60 சுருக்கெழுத்து தட்டச்சர் / தட்டச்சர் மற்றும் 7 உதவி நிலநீர் வல்லுநர் பணியிடங்கள் இந்த ஆண்டு நிரப்பப்படும்.